**O.S.No. 43/2017**

வா.சா.1 , திரு.சீனிவாசன் , த/பெ.நாகன்.
நாள் : 14.03.2023 நேரம் : 12.12 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்–**

**குறுக்கு விசாரணை:–**

1)எனக்கு ஆங்கில எழுத்து வாசிக்க தெரியாது. தமிழ் எழுத்துக்கள் தெரியும். எனது தந்தை பெயர் நாகன். எனது அம்மா பெயர் உடையாள். எனது அப்பா அம்மாவிற்கு மொத்தம் 3 குழந்தைகள் என்றால் இல்லை நான் மட்டும் தான். எனது அம்மாவிற்கு 2 தாரம். மூத்த கணவருக்கு பிறந்தவர்கள் இரண்டு பெண் பிள்ளைகள். அவர்களின் பெயர் முறையே கோமாதா மற்றும் குலமாதா ஆகும். எனது தந்தைக்கும் 2 தாரம். எனது தந்தையின் மற்றொரு மனைவியின் கருப்பி. எனது தந்தைக்கும் கருப்பிக்கும் 5 குழந்தைகள் பிறந்தார்கள். அவர்களில் 3 ஆண், 2 பெண் குழந்தைகள் ஆவார்கள். அவர்களின் பெயர் 1.முருகேந்திரன், 2.சுந்தரபாண்டி, 3.குருவம்மாள், 4.ஜானகி மற்றும் சரசு ஆவார்கள் ஆகியோர் மூத்த தாரத்தின் மக்கள் ஆவார்கள்.

2)எனது தகப்பனார் நாகன் உடன் பிறந்தவர்கள் 1 ஆண் மற்றும் 6 பெண்கள் ஆவார்கள். எனது தாத்தாவின் பெயர் மந்தன். அவர்கள் வாரிசுகள் 2 ஆண்கள் மற்றும் 6 பெண்கள் ஆவார்கள். அவர்களின் பெயர் முறையே 1.கருப்பன், 2.நாகன், 3 பொடிசி, 4.உடையாள், 5.ராக்கி, 6.நாகம்மாள், 7.சிட்டு மற்றும் பாக்கியம் ஆவார்கள். எனது தாத்தா மந்தனின் உடன் பிறந்தவர் பெயர் புதலை என்ற கருப்பன். புதலை என்ற கருப்பன் மற்றும் எனது தாத்தா மந்தன் எந்த தேதியில் எந்த மாதத்தில் எந்த வருடத்தில் பாகம் பிரித்து கொண்டார்கள் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

3)எனது தகப்பனார் உடன் பிறந்தவர்கள் தாவா சொத்து சம்மந்தமாக எவ்வாறு பாகம் செய்து கொண்டார்கள் என்பதற்கு எந்தவிதமான ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து எனது தகப்பனாருக்கு எவ்வாறு கிடைக்கப்பட்டது என்று பிராதில் குறிக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். உண்மையில் எனது தகப்பனார் உடன் பிறந்தவர்களுக்கு தாவா

சொத்தில் உரிமை இருந்திருந்தால் பாகம் பிரித்து கொண்டிருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. நாகனனின் வாரிசுகளும் பாகம் பிரித்து கொண்டதற்கான எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான்.

4)தாவா சொத்து எந்த காலத்திலும் நானோ எனது முன்னோர்களோ பாத்திய அனுபவத்தில் இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். நான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருவதற்கு எனது பெயரிலோ , எனது தந்தை பெயரிலோ எந்தவிதமான அனுபவத்தை காட்டக்கூடிய வருவாய்த்துறை ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் 15.02.1983 ல் வேலுபண்டிதர் மனைவி பூமயில் (பிரதிவாதிகளின் தாயார்) கிரயம் வாங்கியதாக காணப்படுகிறது என்று சொன்னால் சரிதான்.

5)14.03.1986 குருசாமித்தேவர் மகன் வேலுத்தேவருக்கு எனது பெரியப்பா கருப்பன் மகன் வெள்ளி கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். கருப்பன் மகன் வெள்ளி எனது பெரியப்பா என்பதை பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வேலு ஞானபாண்டிக்கு எழுதி கொடுத்த கிரய ஆவணம் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆனால் மேற்படி பி.வா.சா.ஆ.1 சொத்திற்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண். 120/1 என்பது 120/1 ஏ என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 56 செண்ட் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ல் இணைக்கப்பட்டுள்ள 10(1) அடங்களில் சர்வே எண்.120/1 ஏக்கு 41.5 ெஹக்டேர் என்று உள்ளது என்றால் சரிதான். 1

6) 10(1) அடங்கல் இருளாண்டி பண்டிதர் வேலு பெயரில் உள்ளது என்றால் 1982 ல் UDR காலத்தில் தவறுதலாக கூடுதலாக மாறியுள்ளது. 1982 ல் கூடுதலாக பட்டா ஏற்பட்டது குறித்து எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நடவடிக்கை எடுத்ததற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனது வழக்கு பிராதில் தவறுதலாக பட்டா மாறியுள்ளது

என்பது பற்றி கூறவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பிராதில் பட்டா மாறியுள்ளது குறிப்பிடாமல் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அடங்கல் வேலுவின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வேலு பெயரில் உள்ள அடங்கல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டது.

7) நான் இவ்வழக்கை 17.08.2018 தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கின் சொத்து விபரத்தில் சர்வே எண். 120/1 என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 ல் சர்வே எண். 120/1 என்று காணப்படவில்லை என்றால் சரிதான். தற்போது சர்வே எண். 120/1 என்று எந்தவிதமான இடமும் கிடையாது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. ஸ்தலத்தில் இல்லாத சர்வே எண்ணை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்திருப்பது நான் ஏற்றுகொள்ளக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. பிராதில் முறையாக வனையப்படாததால் எனது பிராது ஏற்றுகொள்ளக்கூடியது அல்ல என்றாலும் அந்த வகையில் பிராது தள்ளுபடி செய்யக்கூடியது என்றாலும் சரியல்ல.

8) பிராதில் 5 வது பாராவில் பிரதிவாதிகள் தாவா சொத்தில் தங்களுக்கு பாத்தியம் இருப்பதாக வீண் பிரஸ்தாபிதம் செய்து கொண்டு இருப்பதாக கூறியிருப்பதலிருந்து தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியிருப்பது சட்டப்படி ஏற்றுகொள்ளக்கூடியது என்றால் சரியல்ல. முறையாக நீதிமன்ற கட்டணம் செலுத்தி சொத்து பாத்தியம் என்று வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

9)தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல பிரதிவாதிகள் தாவா சொத்தை மற்றொரு நபரிடம் விற்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் தான் அனுபவித்து வருகிறேன். பிரதிவாதிகளின் பெயரில் நான் முதுகுளத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். சின்னகுமார் தேவர் மகன் ஞானபாண்டி மற்றும் பிரதிவாதிகளின் மேல் புகார் கொடுத்திருந்தேன் என்று சொன்னால் சரிதான். காவல் நிலையத்தில் உரிமையியல் வழக்கு என்று

சொல்லி அனுப்பிவிட்டார்கள். ஞானபாண்டிதான் தற்போது விவசாயம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். ஆனால் சாட்சி தற்போது நான்தான் அனுபவம் செய்து வருகிறேன் என்று சொல்கிறார்.

10)பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் தெற்கே பூமயில் அம்மாள் புஞ்சை உள்ளது என்று சொன்னால் சரிதான். உண்மையான விவரத்தை மறைத்து நான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஞானபாண்டியை இவ்வழக்கில் பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியின் தந்தை தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதியின் தங்கையை நான் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவசியமான தரப்பினராக சேர்க்காததால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் தரப்பில் 12 பேர்கள் குடியிருந்து வருகிறார்கள். பிரதிவாதிகள் கிராமத்தில் கட்டுப்பட்டு நடக்ககூடியவர்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் சமூகத்தை சேர்ந்தவர்கள் எங்கள் சமூகத்தை சேர்ந்தவர்கள் மீறி எதுவும் செய்யமுடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் சுத்தமான கருத்துடன் நீதிமன்றத்தை அனுகவில்லை என்று சொன்னால் சரியல்ல.

11)பிரதிவாதிகள் சர்வே எண். 120/1ஏ வை மற்றவர்களுக்கு விற்றுவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண். 120/1ஏ க்கு வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் மந்தனின் வாரிசு என்பதற்கு எந்தவித சான்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கூறியுள்ள வழக்கு மூலம் சரியல்ல என்று சொன்னால் சரியல்ல. இருளாண்டி மகன் வேலுவின் பெயரில் தான் ரசீது உள்ளது. தீர்வு ரசீது பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டது. தாவா சொத்தை நானோ எனது முன்னோர்களோ பாத்தியத்தில் இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 1.25 P.M

சாட்சியின் கையொப்பம்.